# பொருளியல்

## தேர்ச்சி 4.0

## பல்தேர்வு வினாக்கள்



Start Your Learning Journey with e-thaksalawa

The National e-learning Portal for The General Education

## பல் தேர்வு வினாக்கள்

**1.** நிறுவனம் ஒன்று சராசரி மாறும் செலவின் அதிகுறைந்த புள்ளியில் உற்பத்தியை மேற்கொண்ட நிலையில் தனது உற்பத்தியை குறைத்துக் கொள்ளுமாயின் ஏற்படக்கூடிய மாற்றங்கள்

| | சராசரி மாறும் செலவு | எல்லைச் செலவு | சராசரி மொத்தச்செலவு |
|---|---|---|---|
| 1) | அதிகரிக்கும் | அதிகரிக்கும் | குறையும் |
| 2) | குறையும் | குறையும் | குறையும் |
| 3) | குறையும் | அதிகரிக்கும் | அதிகரிக்கும் |
| 4) | அதிகரிக்கும் | குறையும் | அதிகரிக்கும் |
| 5) | அதிகரிக்கும் | அதிகரிக்கும் | அதிகரிக்கும் |

**2.** குறுங்காலத்தில் நிறுவனம் ஒன்றின் சராசரி உற்பத்தியும் எல்லை உற்பத்தியும் சமனாக அமையும் போது பின்வருவனவற்றில் பொருத்தமானது

1. எல்லைச்செலவும் சராசரி நிலையான செலவும் சமனாகும்
2. சராசரி நிலையான செலவும் சராசரி மாறும் செலவும் சமனாகும்
3. சராசரி மாறும் செலவின் அதி தாழ்ந்த புள்ளியை எல்லைச்செலவு ஊடறுத்து அதிகரித்துச் செல்லும்
4. மொத்த உற்பத்தி பூச்சியமாக அமையும்
5. எல்லை உற்பத்தியின் உச்சத்தில் சராசரி உற்பத்தி அதற்கு சமனாகும்

**3.**

| உற்பத்தி | மொத்தச் செலவு | எல்லைச் செலவு |
|---|---|---|
| 1 | 200 | 150 |
| 2 | 380 | 180 |
| 3 | 540 | 160 |
| 4 | 660 | 120 |
| 5 | 760 | 100 |

நிறுவனத்தின் 4 அலகிற்கான சராசரி நிலையான செலவு யாது

1) 12.5 2) 25 3) 30 4) 40 5) 10

தொகுப்பு : திரு.S.ஜெயக்குமார் (ஆசிரியர், வயாவிளான் மத்திய மகா வித்தியாலயம்)

கணினி வடிவமைப்பு : திரு.சி.உமாகாந்தன் (த,தொ,தொ, ஆசிரியர், யா/யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி )

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

**4.**

| உற்பத்தி | 1 | 2 | 3 | 4 | 5 |
|---|---|---|---|---|---|
| எல்லைச்செலவு | 100 | 120 | 140 | 160 | 180 |

நிறுவனத்தின் நிலையான செலவு 100 எனின் 2 அலகின் சராசரி மொத்தச் செலவு

1) 60 2) 110 3) 160 4) 320 5) 400

**5.**




நிறுவனத்தின் செலவமைப்பு மேலே தரப்பட்டுள்ளது. இந்நிறுவனம் தொடர்பாக சரியான சேர்க்கை

| | நிறுவனம் எதிர்பார்க்கும் ஆகக் குறைந்த விலை | நிலையான செலவு |
|---|---|---|
| 1) | 28/= | 800/= |
| 2) | 20/= | 1000/= |
| 3) | 30/= | 1500/= |
| 4) | 20/= | 1500/= |
| 5) | 10/= | 1000/= |

**6.** நிறைபோட்டி நிறுவனம் ஒன்று தொடர்பில் ஏற்புடைய கூற்று யாது

1. தான் ஏற்கும் விலையில் எந்தவொரு அலகையும் விற்பனை செய்ய முடியும்
2. கேள்விக்கோடு சாதாரண வடிவமானது
3. கேள்விக்கோடு விலை அச்சிற்கு சமாந்தரமானது
4. நிறுவனத்தின் எந்தவொரு விற்பனை அலகும் அதன் விலையை பாதிக்காது
5. நிறுவனத்தின் மொத்த வருமானம் நிலையானது

தொகுப்பு : திரு.S.ஜெயக்குமார் (ஆசிரியர், வயாவிளான் மத்திய மகா வித்தியாலயம்)

கணினி வடிவமைப்பு : திரு.சி.உமாகாந்தன் (த,தொ,தொ, ஆசிரியர், யா/யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி )

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

**7.** சரியான விடையை இனங்காண்க.

| **தனியுரிமைப் போட்டி நிறுவனம்** | **நிறைபோட்டி நிறுவனம்** |
|---|---|
| 1. நெகிழ்ச்சியற்ற சாதாரண கேள்விக்கோடு | முடிவிலிக்கேள்விக்கோடு |
| 2. பொருள் வேறாக்கம் | ஓரினத்தன்மையானவை |
| 3. முடிவிலிக்கேள்விக்கோடு | சாதாரண கேள்விக்கோடு |
| 4. பிரவேச சுதந்திரம் உண்டு | பிரவேச சுதந்திரம் இல்லை |
| 5. பூரண நுகர்வோர் பகுத்தறிவு | நுகர்வோர் பகுத்தறிவை பயன்படுத்த |

**8.** பின்வருவனவற்றில் சந்தை அமைப்பு தொடர்பாக ஏற்புடைய கூற்று எதுவாகும்

1. நிறைபோட்டிச் சந்தையின் கேள்வி வளையி முடிவிலியானது
2. தனியுரிமைப்போட்டி நிறுவனம் ஒரு சில நிறுவனங்களை கொண்டவை
3. தனியுரிமை நிறுவனத்திற்கு நெகிழ்ச்சியற்ற சாதாரண கேள்விக் கோடாகும்
4. சிலர் உரிமைச் சந்தையின் கேள்வி வளையி முடிவிலியாகும்
5. நிறைபோட்டிச் சந்தையின் விலை மாறாது

**9.**

| **உற்பத்தி** | **மொத்தச் வருமானம்** | **மொத்தச்செலவு** |
|---|---|---|
| 1 | 140 | 120 |
| 2 | 280 | 200 |
| 3 | 420 | 260 |
| 4 | 560 | 300 |
| 5 | 700 | 320 |

பின்வருவனவற்றில் பொருத்தமானது மேல் உள்ள அட்டவணை தரவின்படி

1. நிறுவனம் நிறைபோட்டியானது, எல்லைச்செலவு அதிகரிக்கும்
2. நிறுவனம் நிறைபோட்டியானது, எல்லைச்செலவு மாறாது
3. நிறைவில் போட்டி நிறுவனம், எல்லைச் செலவு குறையும்
4. நிறைவில் போட்டி நிறுவனம், எல்லைச் செலவு அதிகரிக்கும்
5. நிறுவனம் நிறைபோட்டியானது, எல்லைச்செலவு குறையும்



Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

**10.** அதிகரிக்கும் அளவுத்திட்ட விளைவு விதிக்கு பொருத்தமான கூற்று

1. நிலையான உள்ளீட்டுடன் மாறும் உள்ளீட்டை இணைத்து உற்பத்தியில் ஈடுபடும்போது மொத்த உற்பத்தி வேகமாக அதிகரித்தல்
2. அனைத்தும் மாறும் உள்ளீடாக உள்ள நிலையில் மாறும் உள்ளீட்டு மாற்ற வீதத்துடன் ஒப்பிடும் போது வெளியீடு வேகமாக அதிகரிக்கும்
3. மாறும் உள்ளீட்டு மாற்ற வீதத்துடன் ஒப்பிடும் போது உற்பத்தி மாற்ற வீதம் குறைவாக இருத்தல்
4. நிறுவன சராசரி செலவு நீண்டகாலத்தில் அதிகரிப்பதனை குறிக்கும்
5. நிறுவனம் குறுங்காலத்தில் தொழிற்படுகின்றது

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

தொகுப்பு : திரு.S.ஜெயக்குமார் (ஆசிரியர், வயாவிளான் மத்திய மகா வித்தியாலயம்)
கணினி வடிவமைப்பு : திரு.சி.உமாகாந்தன் (த,தொ,தொ, ஆசிரியர், யா/யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி )
Copyright © www.e-thaksalawa.moe.gov.lk